# 10 புத்தரும், அன்னப்பறவையும்

சித்தார்த்தர் பூங்காவில் அமர்ந்திருந்தார். இளவரசன் ஒருவன் அன்னப்பறவையை அம்பெய்து வீழ்த்தினான். அது அவரது காலடியில் விழுந்தது. வலியால் துடித்தது. சித்தார்த்தர் அதனை அரவணைத்தார். அதனைத் தருமாறு பறவையை அம்பெய்து வீழ்த்திய அரசகுமாரனின் சேவகன் கேட்டான். சித்தார்த்தர் மறுத்தார். அதன் துன்பம் போக்கினார். உயிரைக் காப்பவனுக்கே உயிர் சொந்தம் என்பதை வலியுறுத்தினார்.



### தேவதத்தன் அன்னப்புள்ளை எய்தல்

பாடியே அன்னப் பறவைகள் வான
வீதி வழியே விரைந்து சென்றன.
செல்வது கண்டு, தேவ தத்தன் -
அரசிளங் குமரற்கு அண்டிய உறவினன் -

வில்லினை வளைத்து வெய்யதோர் பாணம்
எய்து நின்றனன் எய்த அப்பாணம்
முதன்முதலாக முன்னர் சென்ற
அன்னப் பறவை அதன்சிறை யதனில்
படவே, ரத்தம் பாயப் பறவையும்
தளர்ந்து சுருண்டு தரையில் விழுந்தது.

## சித்தார்த்தன் அதை எடுத்தல்

விழுந்த அப்பறவை மேனி முழுதும்
ஒழுகி ஓடும் உதிரம் புரளத்
துள்ளித் துள்ளித் துடிப்பது கண்டு,
செல்வக் குமாரன் சித்தார்த் தன்போய்,
தண்ணிய கரங்களால் தாங்கி எடுத்து,
மடியில் வைத்து மார்போடு அணைத்துத்

தேனும் தளிரும் சேர்த்துப் பிசைந்து
பூசியே வருத்தம் போக்கினன், ஆங்கே
இத்தனை அன்பு காட்டினன் எனினும் அவன்,
நோவு நொம்பலம் நோயின் தன்மை

இந்நாள் வரையிலும் யாதுஎன அறியான், ஆதலின்
பறவையின் மீது பாய்ந்த அம்பின்
முனையைத் தனது முழுக்கை யதனில்
அமுக்கிப் பார்த்தனன், ஐயோ! என்றனன்.

பரிந்து பின்னும் பறவையை எடுத்துத்
தாயினும் இரங்கித் தழுவி அணைத்தனன்.

## சேவகன் பறவையைக் கேட்டல்

சிறிது நேரம் சென்றபின், அங்கோர்
சேவகன் வந்து தெண்டனிட்டு, எங்கள்
அரச குமரன் ஓர் அன்னப் பறவையை

எய்து வீழ்த்தினன். வீழ்ந்த இடமும்
மலர்மிகு ரோஜா வனமிது வேயாம்,
யாதும் தாமதமின்றி அவனிடம்
அன்னப் பறவையை அனுப்பிடுமாறு இங்கு
என்னை உன்பால் ஏவினன் என்றனன்.

சேவகன் மொழிஎலாம் சித்தார்த்தன் கேட்டு,
இயம்பிய மறுமொழி இயம்பக் கேண்மின்.

## சித்தார்த்தன் மறுமொழி



‘‘எய்த அம்பினால் - பறவை
இறந்து வீழ்ந்திடுமேல்,
எய்தவர்க்காகும் - உரிமை.
யாதும் ஐயமில்லை.

நீண்ட சிறகினிலே - விசைதான்
நின்றி ருப்பதல்லால்,
மாண்டதில்லை அன்னம் - உயிர்த்து
வாழுகின்ற தப்பா.

சந்தேகம் வேண்டாம் - அதனைத்
தரமுடியாதப்பா!
எந்த உயிரையும் - காப்பது
என் கடமையப்பா!

பாரில் உயிரையெல்லாம் - அருளால்
பாது காக்கவந்தோன்,
சீரிய நன்மொழிகள் - உள்ளம்
தெளிந்து கூறுகின்றான்.

‘‘இல்லை இல்லையையா! - பறவை
என் பறவை ஐயா!
வல்லடி வழக்கு - நீயும்
வளர்க்க வேண்டாம், ஐயா!

தொல்லுலகமெல்லாம் - அருளால்
சொந்த மாக்கவந்தேன்,
வெல்லும் பொருள்களில் - முதலில்
வென்ற பொருளிதாம்.

எம்ம னிதருமே - உளத்தில்
இரக்க முற்றிடயான்.
செம்மை நெறியினை - நன்கு
தெரிந்து கூறிடுவேன்.

துன்பம் அண்டாமல் - அதனைத்
துரத்தி ஓட்டிடுவேன்,
இன்பம் இவ்வுலகில் - நிலைக்க
என்றும் வென்றிடுவேன்.

மனிதர் மட்டுமல்ல - உலகில்
வாழும் எவ்வுயிரும்,
இனிய வாழ்வடையும் - வழியை
இனிது காட்டிடுவேன்.

என்னுரைகளை நீ - மறுக்கின்,
இன்றே இப்பொழுதே,
மன்னும் நீதிமன்றம் - ஏறி
வழக்கு ரைப்போம் ஐயா.

## நீதிமன்றம் அடைதல்

இருவரும் அப்பால் இசையா ராகி,
அறநூல் கற்றோர் அறிவிற் பெரியோர்,
நடுநிலை நீதி நன்கு கண்டோர்
கூடிய மன்றில் குறைகொண்டு ஏகினர்.

இந்நாள் வரையிலும் எவருமே அறியாப்
புலமை மிக்க புரோகிதன் ஒருவன்,
எழுந்து நின்று, யாவருங் கேட்க,

## புரோகிதன் கூறுதல்

''உயிரைக் கொன்றிடவே - முயலும்
ஒருவனுக்கு அந்த
உயிரின் மேலேதும் - உரிமை
உண்டோ? கூறும் ஐயா!
உயிரைக் காப்பவனே - என்றும்
உயிர்க்கு உடையவனாம்,
அயர்வு வேண்டாம், ஐயா! - இதுவே
அறநூல் விதி ஐயா!
இன்னும் வீண்வாதம் - பேசி
இருப்பதேன்! ஐயா!
அன்னம் சித்தார்த்தன் - பொருளாம்
ஐய மில்லை, ஐயா!''

என்று நீதி எடுத்துண ரச்செய்து
மன்றி லிருந்து மாய மாக
மறைந்து போயினன், மறையும் அந்நேரம்,
பையர வொன்று பதுங்கி அவ்வழி
ஊர்ந்து செல்வதை ஒருவன் கண்டனன்,
சிற்சில காலை தேவரும் இந்த
வடிவந் தாங்கி வருவதுண்டு என்பதால் !
யாதோ உண்மை? யாவரே அறிவார் ?

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| **பாணம்** | - | அம்பு |
| **சிறை** | - | சிறகு |
| **உதிரம்** | - | இரத்தம் |
| **தண்மை** | - | குளிர்மை |
| **நொம்பலம்** | - | துன்பம் |
| **பரிவு** | - | அன்பு |
| **தெண்டன்** | - | வணக்கம் |
| **வனம்** | - | காடு |
| **ஏவினன்** | - | அனுப்பினன் |
| **இயம்பிய** | - | கூறிய |
| **மறுமொழி** | - | பதில் |
| **விசை** | - | வேகம் |
| **சீரிய** | - | சிறந்த |
| **வல்லடி** | - | கொடுமை |
| **தொல்லுலகம்** | - | பழமையான உலகம் |
| **அண்டாமல்** | - | நெருங்காமல் |
| **புலமை** | - | அறிவு |
| **புரோகிதன்** | - | அரசவை அறிஞன் |
| **அயர்வு** | - | தளர்வு |
| **அறநூல்** | - | தருமநூல் |

## கிரகித்தற் பயிற்சி

பூரண வாக்கியங்களில் விடை தாருங்கள்

1. சித்தார்த்தர் எங்கே அமர்ந்திருந்தார் ?
2. அன்னப் பறவைக்கு அம்பு எய்தவர் யார் ?
3. அன்னப்பறவை எங்கு வீழ்ந்தது ?
4. அன்னப்பறவையைத் தன்னிடம் தருமாறு கேட்டவர் யார் ?

## செயற்பாடு

சித்தார்த்தர் அன்னப் பறவையைக் காப்பாற்றிய கதையைக் கேளுங்கள்.

'பாடியே அன்னப்பறவை' என்ற அடி முதல் 'விழுந்தது' என்ற அடிவரை உள்ள பாடப் பகுதியைப் படியுங்கள். பாத்திரமேற்று நடியுங்கள்.

பாடற் பகுதியைச் சுவை உணர்வுடன் வாசியுங்கள்.

தொனி வேறுபாட்டுடன் வாசியுங்கள.

சித்தார்த்தருக்கும் சேவகனுக்கும் இடையே நடந்த உரையாடலை எழுதுங்கள்.

பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் அமையுங்கள்.

1. அரசிளங் குமரன்.
2. உறவினன்.
3. அன்னப்பறவை.
4. தேனும் தளிரும்.
5. சந்தேகம்.